முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மௌனச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

24.10.2018, புதன்கிழமை

1. **ஒளி சூட்சும ஆறுமுகனாரின்**
**உயர் சூட்சுமமாக வந்தநல்**
**அழியாமை பெற்ற ஞானியே**
**ஆறுமுக அரங்கமகா தேசிகனே**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி துலை திங்கள்**
**அறிவிக்க நாத திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 7ம் நாள் 24.10.2018, புதன்கிழமை)**

3. **வாரமதில் மௌனச்சித்தர் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
வாராந்திர வழிபாடு ஆக அரங்கனை
வந்து உலகோர் வணங்கிச் செல்ல

4. செல்லவே முருகப்பெருமான் அருள்
சீவ தயவு உலகோர் அடைந்து
வல்லமையான ஆரோக்கியமும்
வாழும் காலமே பல வெற்றிகளும்

5. வெற்றிகளும் சர்வ சித்தியும்
வினை நீக்கமும் உலகோர் அடைந்து
ஆற்றல்பட சிறப்பு காண்பர்
அரங்கன் தருமம் ஏற்றும்

6. ஏற்றும் உலகோர் தொடர
இணையிலா தருமபலம் கூடி
பற்று நீக்கும் தருமசிந்தை பரவி
பாருலகோர் ஞானவான் ஆவர்

7. அவணியை ஆள வந்த குரு
ஆறுமுகன் சக்தியாக வந்த
அவணி காக்கும் அரங்கமகானை
அணுகி பூசனை செய்பவர்க்கும்

8. அவணியிலே அகத்துள் வைத்துமே
அனுதினமும் பூஜிக்கும் மக்களுக்கும்
புவனமதில் அகசோதி விரிந்து
பூவுலகே சரவணசோதி மூலமாக

9. ஆகவே அருட்பெருஞ் சக்தியாக
ஆறுமுகன் ஆளுமைக்கு வரும்
யுகமே ஞான யுகம் ஆகும்
உயர்வுமிக்க ஞானிகள் இணைந்த

10. இணைந்த சக்தி பெருக்கமாய்
இயற்கை வழி இடரில்லா
இணையிலா மழை வளமுடன்
இயற்கை வழி நன்மை கூடி

11. கூடியே தமிழகம் தொட்டு
குவலயமே மேல்நிலை பெறும்
நாடிடும் ஞான ஆட்சியாகவே
நாட்டிவந்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

### மகான் மௌனச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :

ஒளி வடிவினில் சதகோடி சூரியபிரகாசமாய் ஒளி சூட்சும வடிவினில் விளங்கி நிற்கும் முருகப்பெருமானின் உயர் சூட்சுமமாக அவதரித்திட்ட மகா ஞானியே மரணமிலாப் பெருவாழ்வு பெற்றிட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 7ம் நாள் 24.10.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல் தனையே மௌனச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மௌனச்சித்தர்.

உலக மக்களெல்லாம் வாரம் ஒருமுறையேனும் வழிபாடு செய்திட ஏழாம் படை வீடு ஓங்காரக்குடிலிற்கு வர வேண்டும். வந்துமே அரங்கமகா தேசிகனை வணங்கி செல்ல, அவர்கள் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் அருள் கிடைக்கப் பெற்று, ஜீவதயவினை உலக மக்கள் அடைந்து எல்லா வல்லமைகளையும் அடைந்து, பலவிதமான வெற்றிகளை அடைந்து, ஆற்றலுடன் விளங்கி, ஆரோக்கியமான வாழ்வினை நீடிய ஆயுளுடன் சர்வசித்திகளையும் பெறுவதோடு, அவர்கள் செய்த வினைகளின் துன்பங்களிலிருந்து விடுபட்டும் சிறப்பான வாழ்வினை வாழ்ந்து சிறப்படைவார்கள்.

உலக நலன் கருதி ஆறுமுக அரங்கமகா தேசிகர் ஆற்றும் தானதருமப் பணிகளிலே அவரவரும் பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும், தருமச் செயல்களில் பங்கு கொண்டு செயல்பட அவர்களுக்கு இணையில்லா தருமபலம் பெருகி பற்றுகளை நீக்கவல்ல தருமசிந்தை பரவி உலக மக்கள் ஞானவான்களாக ஆகிடுவார்கள்.

இவ்வுலகினை ஞானிகள் துணையுடன் அருளாட்சி செய்திட ஞானஆட்சி செய்திடவே வந்த குரு முருகப்பெருமானின் சக்தி வடிவமாக வந்திட்ட, உலகம் காக்கும் மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை அவரவரும் பயபக்தியுடன் பணிந்து அணுகி பூஜைகளை செய்பவர்களுக்கும் இவ்வுலகினில் ஓங்காரக்குடிலிற்கு வரமுடியாமல் உள்ள அவரவரும் அவர்களது மனதுள்ளேயே அரங்கனை எண்ணி தினம்தினம் மறவாமல் பூஜிக்கின்ற மக்களுக்கும் அவர்களுக்குள் உள்ள அகஜோதியான ஆன்ம ஜோதி விரிந்து இவ்வுலகமே சரவணஜோதி சக்தி மூலமாக அருட்பெருஞ்சக்தியாக மாறி முருகப்பெருமானின் ஞானஆட்சிக்குள் வந்துவிடும். இந்த யுகமே ஞானயுகம் ஆகிடும்.

உயர்வான ஞானிகள் எல்லாம் ஒன்றிணைந்திட்ட சக்தியின் ஒட்டுமொத்த கூட்டு வடிவமாய் அரங்கனும் ஆகி கட்டுப்படுத்த முடியாத இயற்கை பேரிடர்களையும் கட்டுப்படுத்தி துன்பமில்லாத வகையில் இயற்கையையே மாற்றம் செய்து ஈடுஇணையில்லா மழை வளமுடன் இயற்கை வழி நன்மையும் கூடி தமிழகத்திலிருந்து ஞானமாற்றங்கள், உலகப் பெருமாற்றங்கள் எல்லாம் உருவாகி உலகம் முழுதும் பரவி உலகமே மேன்மையடையும், முருகப்பெருமான் தலைமையில் ஞானஆட்சியும் அமைந்திடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மௌனச்சித்தர்.

–சுபம்–